**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) III - 2017**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) III ஆம் கட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கடவத்த தொடக்கம் கெரவலப்பிட்டிய வரையிலான வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் III ஆம் கட்டத்தினை நிர்மானிக்கும் நேக்கத்திற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 16 ஆம் திகதிய (309) ஆம் மொத்த இலக்க பிபீசீ (2014) 15 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பு நகரப் பிரதேசத்தில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக தெற்கு அதிவேகப் பாதையினையும் கொழும்பிலிருந்து ஆரம்பிக்கின்ற ஏனைய தேசிய வீதிகளையும் இணைகின்ற வகையில் கொழும்பிற்கு வெளிச் சுற்றுவட்டத்தில் அதிவேகப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் நாட்டின் ஏனைய பிராந்தியங்களுடன் இணைப்பினை மேம்படுத்துதல் அதன்மூலம், இலங்கையில் பிராந்தியங்களுக்கிடையே பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்கு பங்களித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 76,200 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 590 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 63,356 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 494 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2014 ஆகஸ்ட் இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூன் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப்பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விதந்துரைப்புக்களின் பிரகாரம் கடனின் கீழான மீளப்பெறுகைகள் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுலாக்கலிற்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தல்களிற்கு இணங்கும் வகையில் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும், ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தவேண்டிய மீதிகள் ரூபா 1,613.19 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் வெளிநாட்டு கடன் கணக்கின் கீழ் காட்டப்பட்டுள்ள மீதி கணக்கீட்டு பிழை காரணமாக உரிய கணக்கில் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வேலை ஆரம்பிப்பு முற்பணங்களில் மீளப்பெறவேண்டிய தொகை ரூபா 6,063.42 மில்லியன் கணக்கீட்டு வழு காரணமாக 2017 திசெம்பர் 31 இல் ரூபா 1,536.18 மில்லியனால் குறைவாகக் காணப்பட்டிருந்தது. மேலும், நிதிக்கூற்றுக்களில் பிடிகாசின் கீழ் காட்டப்பட்டுள்ள மீதிகள் கூட அதே வழுவின் காரணமாக ரூபா 6,256.02 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது.

### 2.2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மீளளிக்கப்பட்ட மேந்தலைக்கிரயம் ரூபா 1.91 மில்லியனானது பொதுத்துறை நிறுவன திணைக்களத்தால் 2003 ஜீன் 02 ல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல PED/12 ன் பந்தி 8.3.9 ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு முரணாக காணப்பட்டது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017ம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| எக்சிம் வங்கி | 494 | 63,356 | 12,070 | 78.93 | 12,065 | 137.05 | 20,950 |
| ஜீஓஎஸ்எல் | 96 | 12,844 | 593 | 3.15 | 482 | 60.77 | 9,289 |
| மொத்தம் | 590 | 76,200 | 12,663 | 82.08 | 12,547 | 197.82 | 30,239 |

## 3.2 பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், நெடுஞ்சாலையின் நிர்மானத்திற்காக ஒப்பந்தமானது 2013 பெப்ரவரி 21 இல் ரூபா 66,690 மில்லியன் செலவில் 2013 ஜனவரி 31 இல் அமைச்சின் அமைச்சரவையின் கீழ் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் கோரப்படாத அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் ஒப்பந்தக்காரர் ஆகஸ்ட் 2014 இலேயே வேலையை ஆரம்பித்தும், அதனுடன் தொடர்புபட்ட வேலைகள் நாட்டில் நிலவிய அரசியல் நிலைமை மற்றும் வேலைப்பரப்பில் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட மாற்றம் என்பன காரணமாக 2016 சனவரி 01 இலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நெடுஞ்சாலை நிர்மான வேலைகளின் ஒட்டுமொத்த செயற்பாடுகள் திட்டமிடலில் காணப்பட்ட மந்தகதி மற்றும் போதியளவான வழங்கள்கள் ஒப்பந்தக்காரரினால் பயன்படுத்தப்படாமை காரணமாக உரிய திகதியில் எதிர்பார்த்த செயற்பாடு 53.99 விதத்தில் 43.13 வீதமானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதமாக காணப்பட்டது. மேலும் 2017 திசெம்பரிற்கான செயற்பாட்டு அறிக்கையின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 154 வரைபு வேலைகளில் 64 வரைபு வேலைகள் மீது செயற்திட்டம் மற்றும் ஒப்பந்தக்காரரினால் பயன்படுத்தப்பட்ட வடிவமைப்பு பொறியியளாளர்களின் குறைபாடு காரணமாக எந்தவித பௌதீக செயல்முன்னேற்றமும் அறிக்கைவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தயாரிக்கப்பட்ட அளவீட்டுப்பட்டியலில் அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு வகைகளுக்காக பிரயோகிக்கப்பட்ட உயர் விகிதங்கள் காரணமாக, நெடுஞ்சாலையின் ஏனைய கட்டங்களின் நிர்மானங்களின் கிரயங்களுடன் ஒப்பிடும் போது ஒப்பந்தக்காரருடன் இணங்கப்பட்ட வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை கட்டம் - III இன் நிர்மானக் கிரயம் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழ்வருமாறு,

| நெடுஞ்சாலையின் பிரிவு | துரம் | ஒரு கிலோ மீற்றருக்கான கிரயம் |
|---|---|---|
| | கிலோ மீற்றர் | ரூபா. மில்லியன் |
| கட்டம்-I கொட்டவ இருந்து கடுவெல | 11.00 | 2,271 |
| கட்டம்-II கடுவெல இருந்து கடவத்த | 8.90 | 6,971 |
| கட்டம்-III கடவத்த இருந்து கெரவலபிட்டிய | 9.32 | 7,155 |

(ஆ) ஆரம்ப அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட கெரவலபிட்டிய மற்றும் உள்ளக 04 ஒழுங்கைகளிலுள்ள இடம்மாறல் பிரிவின் நிர்மானத்தின் கீழ் ரூபா 10,775 மில்லியன் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட வேலைகள் ரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், அதனைத் தொடர்ந்து கடவத்தையிலுள்ள இடம்மாறலின் புதிய நிர்மான வேலைகள் மற்றும் 0+980 கிலோமீற்றர் புதிய ஆரம்பிக்கும் புள்ளி மற்றும் நெடுஞ்சாலையின் 7+900 கிலோமீற்றர் தொடக்கம் 8+543 கிலோமீற்றர் சாலை வாராவதியின் நிர்மானம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 5,188.31 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் அளவீட்டுப் பட்டியலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய புவியியல் வேலைகள் மற்றும் ஏனைய சிவில் நிர்மான வேலைகளின் கீழுள்ள 74 வகையான வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தக்காரரினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனித வள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதி இல்லாமல் வடிவமைப்பாளர் மற்றும் செயற்திட்ட கண்காணிப்பு ஆலோசகர் ஆகியோர் ஒப்பந்த அடிப்படையின் கீழ் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவினால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது மேலும் இவர்களுக்கு ரூபா 4.70 மில்லியன் ஊதியமும் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 நிதிக் கட்டுப்பாட்டிலுள்ள விடயங்கள்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக கடன் ஒப்பந்தத்தின் நிபந்தனை 2.2.7 இன் பிரகாரம் கடன்களின் குறைக்கப்பட்ட மீதிகளின் மீது ஒப்படைப்பு கட்டணமாக ரூபா 91.63 மில்லியன் கடன் வழங்கும் முகவரால் திரும்பப்பெறப்பட்டிருந்தது.

### 3.6 காணி கையேற்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைத்திருந்த தகவலின் பிரகாரம், வத்தள மற்றும் மகர பிரதேச செயலக வரம்பிற்குற்பட்ட பிரதேசத்தின் கீழ் 296 அரச காணித் துண்டுகள் உள்ளடங்களாக 1,280 காணித் துண்டுகள் வீதி நிர்மானிப்பு நோக்கத்திற்காக செயற்றிட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் ரூபா 6,313.70 மில்லியன் இழப்பீடு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், 245 காணித் துண்டுகளின் உரிமை மாத்திரமே உரிய பிரதேச செயலகத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) இழப்பீடு செலுத்துவதில் கானப்பட்ட தாமதம் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் வட்டித் தொகை ரூபா 1,066 மில்லியன் செயற்றிட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2007 சனவரி 10 இன் சுற்றறிக்கை இல 11 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், காணி கட்டிடத்தின் சட்ட ரீதியான பெறுமதி மீதான இழப்பீட்டினை காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழுவின் மதிப்பீடுகள்ன் மீது 40 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு அனுமதித்துள்ளது. மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த 08 நிகழ்வுகளின் மீதான இழப்பீட்டுத் தொகை மொத்தமாக ரூபா 8.06 மில்லியன் உரிய 40 சதவீதத்தினை மிஞ்சி கானப்பட்டது இது மேலே கூறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு முறணாக கானப்பட்டமை கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீட்டுடன் 55 சதவீதம் தொடக்கம் 179 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது இது மேற் கூறிய குழுவினால் 05 நிகழ்வுகள் மீது மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்தது இது விசேட காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மீதான மதிப்பீட்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) செயற்றிட்டமானது வத்தளை பிரதேச செயலகத்தின் கீழுள்ள மிலகாவத்த என்று அழைக்கப்படும் பிரதேசத்தில் 2.63 கெக்டார் பரப்புள்ள காணி ஒன்று ரூபா 34 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது மேலும் இதனை மீள குடியேற்றும் நோக்கத்திற்கான அபிவிருத்திக்கென ரூபா 48.37 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்றிட்டமானது 57 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்த்த எதிர்பார்த்திருந்தது ஆனால் 2017 திசெம்பர் 31 இல் 28 குடும்பங்கள் மாத்திரமே மீளமர்த்தப்பட்டிருந்தன.

(ஈ) ஜயசுமனவத்த என்று அழைக்கப்படும் 2.43 கெக்டாயர் பரப்புடய நிலமானது 2014 இல் ரூபா 96.19 மில்லியன் செலவில் மீள் குடியேற்றும் நோக்கத்திற்காக செயற்றிட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீள குடியமர்த்தப்பட்ட 36 குடும்பங்களிடமிருந்து காணித் துண்டுகளுக்கான செலவினை தவணை அடிப்படையில் மீளப் பெற்றுக்கொள்ள செயற்றிட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2017 திசெம்பர் 31 இல் 07 குடும்பங்களிடமிருந்து ரூபா 14.24 மில்லியன் மாத்திரமே மீளப் பெறப்பட்டிருந்தது. மேலும், செயற்றிட்டமானது 58 காணித் துண்டுகளை ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஒதுக்க உடன்பட்டிருந்தது அதில் 2018 ஒக்டோபர் 30 இல் 33 குடும்பங்கள் மாத்திரமே உரிய காணித் துண்டுகளில் மீள குடியமர்த்தப்பட்டிருந்தன.

### 3.7 சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவத்திலுள்ள விடயங்கள்

வேலைத் தளங்ளில் கழிவு மூலப் பொருட்களின் குவிப்பு, வடிகால் மற்றும் கால்வாய்கள் தடைப்பட்டுள்ளமை மற்றும் கலப்பு தாங்கிகளில் மழை நீரின் சேகரிப்பு போன்ற பல்வேறு பட்ட சுற்றுச் சூழல் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பில் மீளாய்வாண்டின்போது வீதிப் பாவனையாளர்கள் மற்றும் பிரதேச வாசிகளினால் பொது பிரதிநிதித்துவங்கள் எழுந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அளவீட்டுப்பட்டியலில் அவற்றுக்கு ரூபா 103 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான பிரச்சினைகளினை கண்காணிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.